# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

துணை மருத்துவ சேவைக்குரித்தான பல் தொழில்நுட்பவியலாளர் பதவியின்
பயிற்சிக்காக பயிலுனர்களை ஆட்சேர்த்தல் - 2021

01. சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவைக்குரித்தான பல் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக பேராதனை பல்கலைக் கழகத்தின் பல் மருத்துவ பீடம் / சுகாதார அமைச்சின் மஹரகம வாய் வழி சுகாதார நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் பல் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறிக்கு பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2020.10.29 ஆம் திகதிய இலக்கம் 2200 எனும் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2020.11.06 ஆம் திகதிய இலக்கம் 2201 எனும் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 2019 ஆம் ஆண்டிற்கான நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவைக்கு உரித்தான 12 பதவிகளுக்கான பயிற்சிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 2021.02.21 ஆம் திகதி வரை இணைய வழியினூடாக கோரப்பட்ட விண்ணப்பங்களில் இலக்கம் 12 இன் கீழ் பல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பல் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பித்தல் கட்டாயமானதாகும்.

| குறியீட்டு இல | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | பயிற்சி பெறவேண்டிய மொழி |
|---|---|---|---|
| 1. | பல் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |

02. இந்த கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை 20 – 25 ஆகும்.

03. இந்த பயிற்சி நெறிக்கு மாகாணங்களில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யக்கூடிய பயிலுனர்களின் எண்ணிக்கை அந்த மாகாணத்தில் காணப்படும் மத்திய அரசிற்கு மற்றும் மாகாண சபைக்கு உரித்தான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

04. இந்த கற்கைநெறி ஒரு முழுநேரப் கற்கைநெறியாகும். எனவே, ஐந்து வார நாட்கள் உட்பட சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக் கழகம் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரச நிறுவனங்களில் வேறு எந்த முழு நேரப்பயிற்சி நெறிகளை தொடரும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. எவரேனும் ஒருவர் அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துத்தப்பட்டால் பயிற்சிநெறி / பதவியிலிருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காகச் செலவு செய்த அனைத்து செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக் கழகமொன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேரப் பயிற்சிநெறியில் உள்ள ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும்.

4.1. 2021.07.09 திகதியில் நீங்கள் பல்கலைக்கழகமொன்றில் அல்லது பிற அரச நிறுவனமொன்றில் முழு நேரப் பயிற்சி நெறிக்கு பதிவு செய்திருந்தால் அல்லது இணைந்திருந்தால், இந்த பயிற்சி நெறிக்கு இணைத்துக் கொள்ளும் திகதிக்கு முன்னர் உரிய பயிற்சி அல்லது கற்கை நெறியை இரத்துச் செய்திருத்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாதிருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுதால் அவ்வாறான விண்ணப்பதாரிகளும் தமது பெயரை மேற்குறித்தவாறு பதிவில் இருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்கு எழுத்துமூல ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

4.2 2021.07.09 திகதியில் நீங்கள் பல்கலைக்கழகமொன்றில் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் நடாத்தப்படும் கற்கை நெறியொன்றில் பதிவு செய்யாவிட்டாலும் கூட ஏதாவது காரணத்தால்பயிற்சிக்காக பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவர் பயிற்சிக்கு பதிவு செய்வதற்கு முன்னர் அந்த கற்கை நெறிக்கான பதிவை இரத்துச் செய்தல் வேண்டும்.

4.3. நீங்கள் ஏதேனுமோர் பல்கலைக்கழத்தில் பட்டம் பெற்றிருப்பின் குறித்த பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி (Effective Date) கற்கை நெறிக்கு இணைக்கப்படும் திகதிக்கு முந்திய திகதியொன்றாக இருத்தல் வேண்டும்.

4.4. சுகாதார அமைச்சின் கீழ் முழுநேர பயிற்சி நெறியொன்றில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியொருவர் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டால் அதுவரை அவர் பெற்றுவந்த பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்திற்கு அமைய ஒப்பந்த தொகை மற்றும் அதுவரை பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகளையும் செலுத்தி உரிய பயிற்சியிலிருந்து விலகினால் மட்டுமே பயிற்சிக்காக பதிவு செய்யப்படுவார்கள்.

**குறிப்பு** :

I. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 4.1 தொடக்கம் 4.4 வரையுள்ள சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தால் கட்டாயமாக நீங்கள் இப் பயிற்சி நெறிக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

II. அந்த 4.1 இலிருந்து 4.4 வரையிலான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும், நீங்கள் தகைமை பெறுவதற்கு தேவையானZ பெறுமானத்தைபெறவில்லை எனின் அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள வேறு ஏதாவது நிபந்தனைகள் பூர்த்தி செய்யவில்லை எனின் எவ்வகையிலும் இப்பயிற்சி நெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென கருதப்படுவீர்கள்.

III. அவ்வாறே நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்று மற்றைய அனைத்து நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலும்4.1 இலிருந்து 4.4 வரையான நிபந்தனைகள் பூர்த்திசெய்யாதிருப்பின் நீங்கள் எந்த வகையிலும் இப் பயிற்சி நெறிக்கு தகுதி பெற மாட்டீர்கள் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

05. **பதவிக்கு உரித்தான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

| பயிற்சி நெறி | க.பொ.த. (சா.த) பெறுபேறு | க.பொ.த. (உ.த) பெறுபேறு | பயிற்சிக்கான பிற விஷேட தகைமைகள் |
|---|---|---|---|
| பல் தொழில் நுட்பவியலாளர் | சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.தரம்) சித்தி பெற்றிருத்தல் | 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த(உ.தரம்) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடத்தில் திறமை சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு (02) பாடத்தில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். | இல்லை |

06. ஏனைய பொது தகைமைகள்:

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

filenik.com

(இ) பயிற்சியின் பின்னர் மத்திய அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.

(ஈ) சிறந்த உடல், உள தகுதியுடன் இருக்க வேண்டும்.

(உ) தாம் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு கிட்டிய 03 வருடத்திற்குள் தொடர்ச்சியாக வசித்திருக்க வேண்டும். (பிரதேச செயலாளரின் மேலொப்பமிட்ட அல்லது கிராம அலுவலர் கையொப்பமிட்ட DS 4 சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.)

07. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பங்கள் தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவு கடதாசியை உபயோகிக்கவும். அவ்விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 9(அ) வரை முதலாம் பக்கத்திலும் 09(ஆ) தொடக்கம் 12 வரை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கும் விதத்தில் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் இலங்கை வங்கி, தெப்ர பிறேன் கிளையில் இலக்கம் 7041318 எனும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக்கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு 300.00 ரூபா வரவு வைத்து பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்டவேண்டும். பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை தம்வசம் வைத்திருக்கவும்.

(இ) இலங்கை நிர்வாக சேவை / கல்விச்சேவை / இலங்கை கணக்காளர் சேவை / அரச பாடசாலை அதிபர் / சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 512,148.00 இற்குக் குறையாத சம்பளம் பெறும் நிரந்தர, ஓய்வூதியத்துடன் கூடிய பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன், உரிய மாதிரிப்படிவத்தையும் இணைத்து அந்த கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் "துணை மருத்துவ சேவையின் பல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கான பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு- 2021" எனக் குறிப்பிட்டு, அதற்குக்கீழ் நீங்கள் கோரும் மாகாணம் மற்றும் மாவட்டம் என்பவற்றைக் குறிப்பிட்டு 2021.07.09 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம்- நிறுவனம்),இலக்கம் 26, மெடி ஹவுஸ் கட்டிட தொகுதி, 4ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

08. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

09. பூரணமற்ற, மாதிரிப்படிவத்திற்கு அமையாத மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத, வங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2021.07.09 திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

10. மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z மதிப்பெண்ணின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியலைஅடிப்படையாகக்கொண்டு தெரிவுசெய்யப்படுபவர்கள் மட்டுமே சுகாதார அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) க.பொ.த.(உ.த) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மற்றும் Z – மதிப்பெண் குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழின் மூலப்பிரதி (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(இ) க.பொ.த.(சா.த) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி. (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(ஈ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

(உ) மேலே 06 (உ) இன் பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு கிராம அலுவலர் கையொப்பமிட்ட அல்லது பிரதேச செயலாளரினால் துணை ஒப்பமிடப்பட்ட பதிவு தொடர்பான சான்றிதழ்.

11. நேர்முகப்பரீட்சையின் பின்னர் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் விபரங்கள் www.health.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

flexik.com

**12. பயிற்சித் திட்டம்:**

I. நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பல் தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறியை தொடர்வதற்கு பேராதனை பல்கலைக் கழகத்தின் பல் தொழில்நுட்ப பயிற்சி கல்லூரி மற்றும் மஹரகம வாய் வழி சுகாதார நிறுவனத்திற்கு உள்வாங்கப்படுவார்கள். பயிற்சிநெறி ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

II. பயிற்சி கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுனர்கள் பயிற்சி கல்லூரியின் நடைமுறையிலிருக்கும் சட்டதிட்டங்களுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

III. பயிற்சிக் காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடைய தவறும் அல்லது செயல்களில் மற்றும் நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சி கல்லூரியின் பரீட்சைகள் மற்றும் விடுமுறைகள் தொடர்பான விதிமுறைகளை பின்பற்ற தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக்காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படாமல் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

IV. இப்பயிற்சிகாலத்தின் போது பயிலுனர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை V இன் விதிமுறைகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

V. பயிலுனர்கள் பயிற்சிப் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், பயிற்சியின் போது இடைநடுவில் விலகுவதில்லை எனவும், பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின் உரிய பதவியில் நியமனம் கிடைத்தால் குறைந்த பட்சம் பத்து (10) வருடங்கள் அரச சேவையின் கீழ்/ மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றிற்கும் பிணை ஒன்றிற்கும் வருதல் வேண்டும். பயிற்சிக் காலத்தில் பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது இடைநடுவில் விட்டால் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள III இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருடங்கள் மேற்குறிப்பிட்டவாறு பல் தொழில்நுட்பவியலாளர் பதவியில் சேவையாற்ற தவறினால், பயிற்சிக் காலத்தில் அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகளையும் மற்றும் பிணைக்குரிய பணத்தை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தவறினால், அதனை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**13. சேவைக்கு நியமிக்கும் விதிகள்:**

பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டில்லை. ஆனாலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்யும் தினத்திற்கு நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை வெற்றிட பட்டியல் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்ட பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்காக விருப்பத்தெரிவு மற்றும் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சையில் மதிப்பெண் என்பவற்றை கருத்திற்கொண்டு தரம் III பதவியில் நியமிப்பது தொடர்பில் கருத்திற்கொள்ளப்படும்.

பயிற்சியின் இறுதியில் நியமனம் வழங்கப்பட்டால் MT- 6, சம்பள அளவிற்கு அமைய அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் நிபந்தனைகளுக்கு அமைய ரூபா 32,080.00 - 10 X445 - 11X660 - 10X730 - 10 X 750 - ரூபா 58,590.00 சம்பளம் வழங்கப்படும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும். பயிற்சிகளின் போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும், வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச் செய்து பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து இடைநிறுத்தப்படுவதுடன், அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு திருப்தியின்மை பட்டியலில் அவரது பெயரை சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர்கள் உரிய பயிற்சியை தொடர்வதற்கும் மற்றும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்காக பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இம் மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என கண்டறியப்பட்டால், பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படுவீர்கள்.

filehik.com

16. மேற்குறித்தவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவரும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரஅமைச்சின் கொள்கை அமுலாக்கலுக்கும், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு செயற்படல் வேண்டும்.

17. பயிற்சியில் இணைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் விடுதி வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்பட்டால்,அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட அறைக்கான வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் என்பன அறவிடப்படும்.

18. இப் பயிற்சிக்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின் பின்னர் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டால், அதன்பின்னரும் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபடுவது கண்டறியப்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

19. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக ஏதாவது சிக்கல் நிலை தோன்றினால், அது தொடர்பாக சுகாதாரஅமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாவது முரண்பாடுகள் தோன்றினால், சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் எஸ். எச். முணசிங்க,
செயலாளர்,
சுகாதாரஅமைச்சு.

"சுவசிறிபாய",
இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு - 10,
2021, மே 22.

filehik.com

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துணை மருத்துவ சேவையின் பயிற்சிக்கு பல் தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்களைஆட்சேர்த்தல் - 2021**

விண்ணப்பதை நிரப்புவதற்கு முன் வர்த்தமானியின் அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர்:
..............................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் உ+ம் A.B.C.SILVA)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
..............................................................................................................
..............................................................................................................

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்)
..............................................................................................................
..............................................................................................................

2. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |
(பிரதியொன்றை இணைக்கவும்)

3. தபால் முகவரி: சிங்களத்தில் /தமிழில் ஆங்கிலத்தில்

| சிங்களத்தில் /தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |

4. (அ) நிரந்தரமுகவரி: சிங்களத்தில் / தமிழில் ஆங்கிலத்தில்

| சிங்களத்தில் / தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |
| .................................................... | ........................................ |